Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

24.11.2026
ஊடக வெளியீடு

DATO' IR. PATHMANATHAN K.
CEO, PBAHB and PBAPP.

பினாங்கு நீர் விநியோகம்: உண்மைகள் மற்றும் புள்ளிவிவரங்கள் மீது கவனம்

- நீர் அவசரகாலத் திட்டம் **2030,** பேராக்-பினாங்கு நீர் திட்டம் **2032** மற்றும் முன்மொழியப்பட்ட எதிர்கால கடல்நீர் சுத்திகரிப்புத் திட்டங்கள் ஆகியவை, கணிக்கப்பட்ட **27.2%** பயன்பாட்டு அதிகரிப்பு, பருவநிலை மாற்றம் மற்றும் சுங்கை மூடா அபாயங்கள் ஆகியவற்றை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளாகும்.

பினாங்கு, செவ்வாய், 24.11.2026: பினாங்கின் எதிர்கால வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், போதுமான நீர் விநியோகத்தின் கிடைப்புத்தன்மை மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த, PBAPP முக்கிய நீர்த் திட்டங்களை விரைவுபடுத்தி வருகிறது.

'நீர் அவசரகாலத் திட்டம் 2030' (WCP 2030), 'பேராக்-பினாங்கு நீர் திட்டம் 2032' (P-PWP 2032) மற்றும் முன்மொழியப்பட்ட கடல்நீரை சுத்திகரிக்கும் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான காரணங்கள் பின்வருமாறு:

1. சிறிய நிலப்பரப்பு: பினாங்கு மாநிலம் 1,158 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பை மட்டுமே கொண்டுள்ளது. எதிர்காலத்தைக் கருத்தில் கொள்ளும்போது, 2030-களில் ஏற்படக்கூடிய விரைவான பொருளாதார வளர்ச்சியைத் தாங்குவதற்குத் தேவையான போதிய அளவிலான நீர் வளங்கள் மாநிலத்திற்குள் இல்லை; பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வது என்பது இன்னும் சவாலான காரியமாகும்.

2. சுங்கை மூடா தொடர்பான அபாயங்கள் மற்றும் சவால்கள்: சுங்கை மூடா என்பது பினாங்கு மாநிலத்தின் முதன்மையான மூல நீர் ஆதாரமாகும். கெடா மாநிலத்தில் "இரண்டு ஆண்டுகளில் ஐந்து பருவ நெல் சாகுபடித் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், 2025-ஆம் ஆண்டு முதல், நீர்ப்பாசனத் தேவைகளுக்காக இந்த ஆற்றிலிருந்து எடுக்கப்படும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. மேலும், கெடா மாநிலத்தில் ஆற்றில் ஏற்படும் சிக்கல்கள் பினாங்கு மாநிலத்தில் உள்ள 4,50,000-க்கும் மேற்பட்ட

நீர் பயனீட்டாளரைப் பாதிக்காதவாறு தடுப்பதற்காக, PBAPP நிறுவனம் 2024-ஆம் ஆண்டு முதல் 'சுங்கை மூடா நெருக்கடி மேலாண்மைத் திட்டத்தை' செயல்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறது.

3. கணிக்கப்பட்ட நீர் பயன்பாடு: 2025-ல், பினாங்கின் நீர் பயன்பாடு 865 MLD ஆக இருந்தது. உற்பத்தித் துறை, சொத்து மேம்பாட்டாளர்கள், PDC மற்றும் பெர்டா (PERDA) ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களின்படி, 2032-க்குள் நீர் பயன்பாடு குறைந்தபட்சம் 27.2% அதிகரித்து 1,100 MLD ஆக உயரும்.

4. பருவநிலை மாற்றம்: உலகளாவிய பருவநிலை மாற்றத்தால், பினாங்கின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஆண்டு மழைப்பொழிவு கணிக்க முடியாததாகிவிட்டது. ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணை ஆகியவை வறண்டு போகாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, PBAPP, ஆயிர் ஈத்தாம் அணை செயல் திட்டம் (AIDAP) மற்றும் D3PI (பினாங்கு தீவில் இரட்டை அணை பாதுகாப்பு) ஆகியவற்றை ஆண்டு முழுவதும் செயல்படுத்த வேண்டியிருந்தது.

இந்த உண்மைகள் மற்றும் புள்ளிவிவரங்கள், பினாங்கு மாநிலம் தற்போது எதிர்கொண்டு வரும் நீர் தொடர்பான சவால்களையும் எதிர்காலத்தில் எதிர்கொள்ளக்கூடிய சவால்களையும் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

பினாங்கு மாநிலத்திற்கான உரிமம் பெற்ற நீர் விநியோக நிறுவனமாகச் செயல்படும் PBAPP, இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், தனது 'பினாங்கு நீர் விநியோக வழிகாட்டித் திட்டம் 2040' (PWSR 2040) மூலம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய இலக்குத் திட்டங்கள் பின்வருமாறு:

- WCP 2030 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துத் திட்டங்களையும் நிறைவு செய்வதன் மூலம், பினாங்கு மாநிலத்தின் சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தித் திறனை மொத்தம் 602 மில்லியன் லிட்டர் (MLD) அளவிற்கு அதிகரித்தல், செபராங் பிறையில் நான்கு புதிய நீர் சுத்திகரிப்பு நிலையங்களை (WTP) செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல் மற்றும் சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பினாங்குத் தீவுக்கு அதிகளவு நீரை விநியோகித்தல் ஆகியவை அடங்கும்.

- மாநிலங்களுக்கு இடையிலான P-PWP 2032 திட்டத்தின் மூலம்

பேராக் மாநிலத்திலிருந்து நாளொன்றுக்கு 300 முதல் 500 மில்லியன் லிட்டர் வரை சுத்திகரிக்கப்பட்ட நீரைக் கொள்முதல் செய்து, தென் செபராங் பிறை மற்றும் மத்திய செபராங் பிறை பகுதிகளுக்கு அதிகளவு நீரை விநியோகிப்பதுடன், பினாங்கு மாநிலத்திற்கான இரண்டாவது முக்கிய நீர் ஆதாரத்தையும் உறுதிப்படுத்தப்படும்.

- நீர் விநியோகத்தின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும், 2030ஆம் தசாப்தத்தில் மூலோபாய ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

நீர் பாதுகாப்பு: ஆதரவும் ஒத்துழைப்பும்

நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கியமான உண்மையும் சில புள்ளிவிவரங்களும் உள்ளன:

பினாங்கு எதிர்கொள்ளும் நீர் தொடர்பான சவால்கள் மற்றும் நிலவும் நீர் பற்றாக்குறை சூழலுக்கு மத்தியிலும், 2025-ஆம் ஆண்டில் அங்கு ஒரு தனிநபருக்கான சராசரி வீட்டு உபயோக நீர் அளவு நாளொன்றுக்கு 267 லிட்டராக (LCD) இருந்தது. இதனை ஒப்பிடுகையில், 2025-ஆம் ஆண்டிற்கான தேசிய சராசரி அளவு 225 லிட்டராக இருந்தது; இது பினாங்கின் அளவை விட 18.7 சதவீதம் குறைவு. சிங்கப்பூரைப் பொறுத்தவரை, 2025-ஆம் ஆண்டில் ஒரு தனிநபருக்கான சராசரி வீட்டு உபயோக நீர் அளவு 141 லிட்டராகப் பதிவாகியுள்ளது.

சுருக்கமாகக் கூறுகையில், 2025ஆம் ஆண்டில் சராசரியாக ஒரு பினாங்கு மாநில குடியிருப்பாளர் தனது வீட்டில் பயன்படுத்திய நீரின் அளவு, சராசரி மலேசியர் அல்லது சிங்கப்பூரரின் நீர் பயன்பாட்டை விட அதிகமாக இருக்கிறது.

இதற்கிடையே, பினாங்கு மாநிலத்தில் அதிகமான மக்கள் நீர் பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் செயல்படுவதை ஊக்குவிக்கும் வகையில், PBAPP தொடர்ந்து ஊடகங்களுடன் இணைந்து செயல்படும்.

நீரைப் பொறுப்புடன் பயன்படுத்துவதில் அதிக அக்கறை காட்டுவது என்பது, பினாங்கு மாநிலத்தின் நீர் நிலவரம் குறித்து அதிக விழிப்புணர்வுடன் இருப்பது, வீடுகளில் நீரை மேலும் சிக்கனமாகப் பயன்படுத்துவது, வீட்டின் நீர்க் கட்டணச் செலவைக் குறைப்பது மற்றும் 2026ஆம் ஆண்டிற்கான நாளொன்றுக்கு தனிநபருக்கு 250 லிட்டர் (LCD) என்ற மாநில இலக்கை அடைவதற்கானப் பங்களிப்பாகும்.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

பினாங்கு மாநிலத்திலுள்ள அனைத்து வீட்டு உபயோக நீர் பயனீட்டாளர்களும் நாளொன்றுக்கு 17 லிட்டர் நீரைச் சேமிப்பதன் மூலம், மொத்தம் 30.6 மில்லியன் லிட்டர் நீரை (MLD) சேமிக்க முடியும். நீண்டகால வறட்சியான பருவநிலை நிலவும் சூழலில், இந்த 30.6 மில்லியன் லிட்டர் நீர் சேமிப்பானது, பினாங்கு மாநிலத்திலுள்ள அனைத்து வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் நீர் பற்றாக்குறை ஏற்படுவதற்கும், போதுமான நீர் விநியோகம் கிடைப்பதற்கும் இடையிலான முக்கியமான வேறுபாட்டை ஏற்படுத்தக்கூடும்.

பினாங்கு மாநில நீர் பயனாளர்கள் தங்களது வீடுகளில் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது கடினமான காரியமல்ல. எனவே, பொதுமக்கள் அனைவரும் www.pba.com.my என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள வீட்டு உபயோகத்திற்கான நீர் சேமிப்பு வழிமுறைகளைப் பின்பற்றி, நீரை சிக்கனமாகப் பயன்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Section
மின்னஞ்சல் : comms@pba.com.my